# சூரத்துச் சூருவளி

சென்னப் பட்டணத்து ஸெண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து 21-ந் தேதி சனிக்கிழமையன்று மாலை சென்னப் பட்டணத்துப் புதிய கட்சிப் பிரதிநிதிகளிலே குமார் 30 பேர் புறப்பட்டோம். தஞ்சாவூர் கே. ராமஸாமி அய்யர், தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை, சென்னப் பட்டணத்திலிருந்து சக்கரைச் செட்டி ·பி. ஏ. பி. எல், துரைசாமி அய்யர் எம். ஏ. பி. எல், சங்கர நாராயணய்யர், வெங்கடரமணராவ், யதிராஜ் சுரேந்திர நாத், நான் முதலியவர்களும், திருவல்லிக்கேணியிலிருந்து சில பிரபுக்களும், வெளியூர் கனவான்கள் சிலரும் எங்கள் கூட்டத்திலே சேர்ந்திருந்தனர். ஸ்டேஷனுக்கு எங்களுடைய சிநேகிதர்களும், சுதேச பக்தியின் விசேஷத்தினல் எங்களைப் பிரியத்துடன் உபசரித்தனுப்ப வந்த கனவான்களும் நாளு திசைகளிலிருந்தும் வந்து சேர்ந்திருந்தார்கள். ஸ்வதேச விசுவாசத்தையே ஆவேசமாகக் கொண்டவர்களும் பாரத நாட்டின் எதிர்காலத்து ஸம்ரக்ஷகர்களுமாகிய வாலிபர்கள் வந்து எங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை விளைவித்தார்கள். சுமை வண்டிகளை எங்களுடைய அறைகளுக்கு இழுத்து வருவதற்கு நாங்கள் கூலிக்காரர் வைத்திருந்த போதிலும், சில குணசாலிகளான வாலிபர்கள் அந்த வண்டிகளைத் தாமே இழுத்து வந்தார்கள். வந்தே மாதர முழக்கம். கொஞ்சமில்லை. அவர்கள் அன்பு நிறைந்த

பார்வைகளாலும், கைலாகுகளாலும், வந்தனங்களாலும், எங்களை வாழ்த்துக் கூறி அனுப்பிய காலத்தில் இவ்வளவு விசுவாசமும் உண்மை நிலையும் வாலிபர்கள் பெற்றிருப்பது பாரத ஜாதிக்கு க்ஷேம காலம் வந்து விட்ட தென்பதற்கு ஓர் நல்லடையாள மென்று எங்களுக்குத் தோன்றியது.

ட்ரெயின் புறப்பட்டது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் நம்மவர்கள் "வந்தே மாதர" முழக்கம் இடைவிடாது நடத்தி வந்தார்கள். எங்களுக்கு வேண்டிய ஆகார முதலிய சவுகரியங்கள் எல்லாம் வழி ஸ்டேஷன்களிலே பல தேசாபிமானிகளால் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தன. ஓர் இரவும் ஒரு பகலும் கழிய மறு இரவிலே சுமார் பத்து மணிக்கு புனு ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தோம். புனு நகரம்தான் புதிய கட்சியாருடைய காசி க்ஷேத்திரம். புனு நகரத்து ஸ்டேஷனில் எங்களை வந்து சந்திக்க வேண்டு மென்று சித்திர சாலைத் தலைவராகிய ஸ்ரீ. வி. ஜி. ஜோஷிக்குத் தந்தி கொடுத்திருந்தோம். சில தினங்களின் முன்பாகவே ஸ்ரீ. ஜோஷி அவ்வூரிலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டாராகையால் அவருக்கு எங்கள் தந்தியே கிடைக்கவில்லை. ஆயினும் வேறு பல மகாராஷ்ட்ரர்கள் வந்து ஸ்டேஷனிலிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் நாங்கள் திலகருடைய கட்சியார் என்று கேள்வியுற்ற உடனே மிகுந்த சந்தோஷமடைந்தவர்களாய் எங்களிடம் குசல விசாரணைகள் புரிந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறி அனுப்பினார்கள். திங்கட்கிழமை காலை பம்பாய் நகரத்தில் வந்திறங்கினோம். ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே உள்ள 'ஸர்தார் கிருஹம்' என்ற ஒரு வசதியிலே கொண்டு எங்களை வி. ஓ. சிதம்பரம் பிள்ளை இறக்கிவிட்டார்.

அவர் வியாபார சம்பந்தமாக அடிக்கடி பம்பாய்க்கு வந்து பழக்க முடையவராதலால் எங்களுக்குக் காண்பித்த வசதி மிகவும் நல்லதாக அமைந்திருந்தது. நாங்கள் அங்கே

தங்கியிருந்த ஒரு நாளில் மட்டும் அந்த இடத்திற்கு சுமார் ஆயிரம் விருந்தாளிகள் வந்திருக்கக் கூடும். அப்படி இருந்தும் அவர்களுக்கெல்லாம் தக்கபடி உபசரணைகள் செய்யப்பட்டன. நாங்கள் வந்ததற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான் மேற்படி கிருகத்திலே திலகர், லாஜ்பதிராய், அஜித்சிங் என்ற மூவர்களும் வந்திருந்து விட்டுப் போனதாகக் கேள்வியுற்றோம்.

அன்றைய தினம் பகல் முழுவதும் பம்பாய் நகரத்திலே உள்ள முக்கியமான ஸ்தலங்களைச் சுற்றிப் பார்த்தோம். இரவு சுமார் 10.30. மணிக்கு ரயிலேறிக் காலையிலே ஸூரத்துக்கு வந்து சேர்ந்தோம். ரயில்வே ஸ்டேஷனில் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியும், வேறு சிலரும் வந்திருந்தார்கள். நாங்கள் வந்தவுடனே எங்கள் முன்பு வந்து, "நீங்கள் காங்கிரஸ் கூடாரத்துக்குப் போகிறீர்களா? அல்லது புதிய கட்சியாரின் கூடாரத்துக்குப் போகிறீர்களா?" என்று விசாரணை செய்தார். நாங்கள், "ஐயா, காங்கிரஸ் சபைக்குத் தான் வந்திருக்கிறோம். நாங்கள் சுதேசிக் கட்சியைச் சேர்ந்தவர்கள்" என்று மறுமொழி கூறினோம். நாங்கள் இது சொன்னவுடனே, காங்கிரஸ் காரியதரிசி எங்களைக் கவனியாமல் போய் விட்டார். இரண்டு கட்சியாருக்கும் முடிவான பிரிவினை உண்டாக்க வேண்டுமென்று மேட்டா வகுப்பினர் நிச்சயம் செய்து விட்டார்கள் என்பது எங்களுக்கு அப்போதே புலப்பட்டது. அப்பால் சுதேசிக் கட்சியாருக்கென்று பிரத்தியேகமாக ஸூரத் நகரத்துக்குள்ளே "வாணியசேரி" என்ற இடத்தருகே வசதிகள் செய்து வைத்திருந்த சங்கத்தார்களிலே சிலர் எங்களை அழைக்கும் பொருட்டு வந்திருந்தார்கள். அவர்கள் தயார் செய்த வசதிக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே "வந்தே மாதரம்" பத்திராதிபராகிய ஸ்ரீமான் அரவிந்த கோஷ், துணைப் பத்திராதிபராகிய சியாமஸுந்தர

சக்ரவர்த்தி முதலிய மகான்களெல்லாம் வந்து இறங்கி யிருந்தார்கள். ஸுரத் நகரத்துப் புதிய கட்சி நண்பர்கள் எங்களுக்குச் செய்து வைத்த வசதி மிகவும் அசௌகரியமானது. கீழே ஒரு கோயில், மேலே பெங்காளத்திலிருந்தும், சென்னை மாகாணத்திலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளுக்கு இடம். புழுதி சொல்ல முடியாது. நடந்து போகும் போதே, மோட்டார் வண்டி யோடுவது போலப் புழுதி; எழுந்தால் புழுதி. தூசியும் குப்பையும் நிறைந்த அந்த இடத்திலே செல்வத்திலும், கல்வியிலும் நிகரற்றவர்களும், பாரத நாடு முழுமையும் பரவிய கீர்த்தியுடையவர்களுமான பெரியோர்கள் வந்து தங்கி இருந்தார்கள். ஜலத்திற்கும் கஷ்டம்தான். சாப்பாட்டுக்கு வீட்டிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்தில் ஒரு அன்னசாலை வைத்திருந்தார்கள். அந்த அன்ன சாலையின் சாப்பாடு மகாராஷ்ட்ர சபையார்களால் தயார் செய்து வைக்கப்பட்ட தாகையால் மற்றவர்களுக்குக் கொஞ்ச மேனும் ஒத்துக் கொள்ளவில்லை. வட தேசத்திலே திருஷ்டி தோஷம் கிடையாது. தென்னாட்டிலேயிருந்த பிராமணர் கள் மற்ற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து பாரத நாடு முழுமையினுமிருந்து வந்திருந்த சுதேசிகளுடன் ஒரே பந்தியில் உட்கார்ந்து உண்டனர்.

நமது மாகாணத்திலிருந்து போன பிரதிநிதிகளிலே பெரும்பான்மையோர் மேற்படி அன்னசாலையில் உண்டு, அதற்கடுத்த புதியகட்சி வசதியிலேயே தங்கி விட்டார்கள். சிலர் மட்டும் பொதுக் காங்கிரஸ் பந்தலிலே போய் வாசம் புரிந்தோம். 24, 25ந் தேதிகளில் எங்களுடைய சுதேசிய சங்கம் (நாஷனலிஸ்ட் கான்பரன்ஸ்) நடைபெற்றது. இரண்டு தினங்களிலும் ஸ்ரீ அரவிந்த கோஷ் (வந்தே மாதரம் பத்திராதிபர்) அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான் திலகர் உபந்நியாசம் செய்தார். காங்கிரஸ் சபை

கூடப் போவதன் சம்பந்தமாகப் புதிய கட்சியார் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னின்ன என்பதைத் திலகர் விஸ்தரித்துக் கூறினார். இந்த இரண்டு தினங்களிலேயும் புதிய கட்சிச் சங்கத்தார் செய்துகொண்ட தீர்மானங்கள் ராஜாங்க சம்பந்தமானவையாதலால் அவற்றை இந்தப் பொதுவர்த்தமானங்களோடு சேர்க்காமல் வேறிடத்திலே விவரித்தல் பொருந்துமென்று நினைக்கிறோம்,

புதுக்கட்சி கான்பரன்சுக்கு ஸர்தார் அஜித்சிங் வந்திருந்தார். அவரைச் சென்னை சுதேசியஸ்தர்களாகிய நாங்களெல்லோரும் காங்கிரஸ் பந்தலிலிருந்த எங்கள் கூடாரத்துக்கு அழைத்துச் சென்று ரோஜாப் புஷ்பங் களால் அர்ச்சனை செய்து வாழ்த்துக்கள் கூறி உபசரித் தோம். அஜித்சிங் 26 வயதுள்ளவர், சாமானிய குடும்பத் திலே பிறந்தவரான போதிலும், பார்வைக்கு ராஜ குமாரனைப் போலிருக்கிறார்.

வீரியமும், பராக்கிரமமும், ஸாஹஸமும், கூர்மையான அறிவும், களங்கமற்ற சிந்தையும், இவர் முகத்திலே ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. இவர் தம்முடைய அற்புத சரித்திரத்தை யெல்லாம் நாம் வற்புறுத்தியதன் பேரில் நமக்குத் தெரிவித்திருக்கின்றார். அதைச் சுருக்க மாக விவரித்துவிட்டு மேலே செல்லுவோம்.

லாலா லாஜ்பதிராயைப் பிடித்து மாண்டலேக்கு அனுப்பியவுடனே ஸர்க்கார் அதிகாரிகள் இன்னொரு தேசாபிமானியைப் பிடித்து அனுப்பப் போகிறார்களென்ற பிரஸ்தாபம் உண்டாயிற்று. தேச முழுவதும் இந்த இரண்டாவது தேசாபிமானி யாராயிருக்கலாம் என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தது. லாலா லாஜ்பத்ராயின் உயிர்த் தோழராகிய லாலா ஹம்ஸராஜ் என்பவரை ஒருவேளை அனுப்பக் கூடும் என்ற சந்தேகம்

உண்டாயிற்று. அப்பால் ஸர்தார் அஜித்சிங் என்ற ஒருவரைப் பிடித்து அனுப்பப் போகிறார்கள் என்ற சமாசாரம் கிடைத்தது. சில நாட்களிலே ஸர்தார் அஜித்ஸிங் போலீசார் வசமிருந்து தப்பி விட்டாரென்றும், இவர் இன்ன இடத்தில் ஒளிந்துக் கொண்டிருக்கிறார் என்பதும் தெரியாமல் தேடித்திரிந்து கொண்டிருக் கிறார்கள் என்றும் வர்த்தமானம் தெரிந்தது. லாலா லாஜ்பத்ராய் மேலேனும், ஸர்தார் அஜித்சிங் மேலேனும் அதிகாரிகள் எவ்விதமான குற்றமும் எடுத்துக்கூற முடிய வில்லையாயினும் ஸர்தார் அஜித்சிங் ராணுவத்தாரின் மனதிலே ராஜ துரோகம் விளைவிக்க முயற்சிகள் புரிந்தார் என்று வதந்தி உண்டாயிற்று. பிறகு ஒருநாள் அமிருத சரஸ் என்ற நகரத்திலே ஸர்தார் அஜித்ஸிங் ஒருமடத்திலே மாறு வேஷம் கொண்டிருந்தாரென்றும் அங்கிருந்து அவரைப் பிடித்து மாண்டலேக்கு அனுப்பிவிட்டார் களென்றும் தந்தி கிடைத்தது. நாடகத் தோற்றங்கள் போலக் கேட்டோரெல்லாம் வியப்பும், மயிர்க் கூச்சும் அமையும்படியான இந்த சம்பவங்கள் நிகழ்ச்சி பெறுவதன் முன்பு நாமெல்லாம் அஜித்ஸிங் என்று பஞ்சாபிலே ஒருவர் உண்டென்பதைக்கூட அறியோம். வானத்திலே திடீரென்று ஒரு புதியநட்சத்திரம் காணப்பட்டு எந்நாளும் மங்காத ஒளியுடன் பிரகாசிப்பதுபோல இவர் திடீரென்று நமது தேசபக்தர் திருக் கூட்டத்திலே வந்து சேர்ந்து கொண்டார்...

சென்ற டிசம்பர் மாதம் காங்கிரஸ் சபை எந்த விதத்தில் தகர்ந்து போனது என்பதைப் பற்றி இங்கு சில விஷயங்கள் குறிப்பிடுவது பொருத்தமுடையதாகுமென்று கருதுகிறோம். 1906ம் வருஷத்திலே கல்கத்தாவில் காங்கிரஸ் நடந்தது. அதற்குச் சில மாதங்களின் முன்பு தான் கல்கத்தாவில் விபினசந்திர பாபு "வந்தே மாதரம்"

பத்திரிகை ஆரம்பம் செய்தார். பெங்காள முழுமை யிலேயும் புதிய கிளர்ச்சியின் பெருக்கம் மிகுதிப்பட் டிருந்தது. பெங்காளத்திலே சிறியோர், பெரியோர், ஏழைகள். செல்வர் முதலிய எல்லோரும் அன்னிய வஸ்து பஹிஷ்காரத்திலே ஓரே திடசிந்தை கொண்டவர்களாய் இருந்தார்கள். அந்தக் காங்கிரஸ் சபை நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே கட்சிச் சண்டைகள் பலமாய் விட்டன. திலகரை அக்கிராசனாதிபதியாக்க விபின சந்திரர் இடத்துக்கிடம் போய் உபந்நியாசங்கள் செய்து முயற்சி புரியத் தொடங்கினர். பம்பாய் மேத்தா கம்பெனியாரே காங்கிரஸ் கூத்தின் "ஸ்டேஜ் மானேஜர் களாக" அப்போதும் இருந்தார்களாகையால், திலகர் கூடாதென்று சுரேந்திர நாதருக்குப் பலமான போதனை கள் செய்து வற்புறுத்தி விட்டார்கள். சுரேந்திர நாதருக்கு அப்போது சரியான யோசனை ஏற்பட்டு, இரண்டு கட்சிக்கும் பொதுவானவரும் நமது ராஷ்ட்ரீய முயற் சிக்கு மூதாதையும் ஆகிய தாதாபாய் நவுரோஜிக்கு தந்தி கொடுத்து அவரை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக் கொண்டார். தாதாவும் சம்மதமளித்து விட்டார். இதில் புதிய கட்சியாருக்கு சந்தோஷமுண்டாய் திலகர் வரவேண்டுமென்று நடத்திய பிரயத்தனங்கள் கைவிடப் பட்டன. அந்த வருஷம் பெங்காளத்திலே இருந்த கிளர்ச் சிக்கு தாதா பாய் நவுரோஜியைத் தவிர வேறு யார் அக்கிராசனாதிபதியாக இருந்தபோதிலும் மிகவும் கஷ்டம் ஏற்பட்டிருக்கும். காங்கிரஸ் டிசம்பர் மாதம் நடந்தது. பெங்காளத்தார், சுதேசியம், பஹிஷ்காரம், ஜாதியக்கல்வி என்ற விஷயங்களிலேயும் மிகவும் ஊர்ஜிதமாயிருந்தார்கள். மேத்தா முதலியவர்களுக்கு மேற்படி மூன்று விஷயங்களி லும் சம்மதமில்லை. நவுரோஜியைக் கலைத்து விடுவதற்கு மேத்தா வகையறுக்கள் செய்த முயற்சி கொஞ்சமில்லை.

ஆனால் தாதாவோ புதிய கிளர்ச்சி இந்நாட்டில் உண்டா யிருப்பது பற்றி உள்ளம் பூரித்துப் போயிருந்தார். தமது முயற்சிகளெல்லாம் பழுக்கும் காலம் வந்து விட்டது என்பதை தாதா அறிந்துகொண்டார். மேத்தா முதலிய வர்களும் பெங்காளத்திலிருந்த தேச பக்தி வெள்ளத்தைக் கண்டு பயந்து இந்த வெள்ளத்தை எதிர்க்க நம்மால் முடியாது என்று எண்ணிவிட்டார்கள். எனினும் இரு திறத்தாருக்கும் பலமான விவாதங்களும் சண்டைகளும் நடக்காமலிருக்கவில்லை. ஆனால் தாதாவின் அறிவு முதிர்ச்சியாலும், அன்பினாலும், அந்த விவாதப் புயல் காற்றிலே காங்கிரஸ் கப்பல் சிதறி விடாமல் பாதுகாக்கப் பட்டது. சுதேசியம், பஹிஷ்காரம், ஜாதியக் கல்வி என்ற மூன்று மட்டுமேயன்றி ஸ்வராஜ்ய விஷயமாகவும் தீர்மானங்கள் செய்து கொள்ளப்பட்டன. காங்கிரஸ் சபை முழுதும் அத் தீர்மானங்களை அங்கீகாரம் செய்து கொண்டது. அத் தீர்மானங்கள் முழுமையும் புதிய கட்சியார் பூர்ண திருப்தி கொள்ளுமாறு அமைந்திரா விட்டாலும் பெரும்பாலும் புதிய கட்சியின் நோக்கத்தைத் தழுவியனவாகவும், அபிவிருத்தி முகம் கொண்டன வாகவும் இருந்தன. புதிய கட்சியார் ஒரேயடியாக நாடு முழுதும் நமது நோக்கத்துக்கு வந்து விடுவது சாத்திய மில்லை யாகையால் சிறிது சிறிதாகவேனும் சரியான சுதேசிய வழிக்குக் காங்கிரஸ் சபை திரும்பிக் கொண்டி ருக்குமாயின் அதுவே போதுமானது என ஒருவாறு மனத் திருப்தி கொண்டவர்கள் ஆயினர்.

தேச முழுவதும் தாதாபாயின் திறமையை வியந்து, அவர் செய்த காரியத்திலே மிகுந்த சந்தோஷ மெய்திற்று. எங்கே பார்த்தாலும் ஜனங்கள் புதிய கட்சியின் பாரிசமாக அதிகச் சார்பு காட்டத் தொடங்கினார்கள்.

இதெல்லாம் மேத்தா கம்பெனியாருக்குப் பிடிக்க வில்லே. புதிய கட்சியார் செய்த முயற்சியின் விளேவை அழித்துவிட வேண்டுமென்று அவர்கள் தம்மால் இயன்ற விதங்களில் எல்லாம் வேலேசெய்து பார்த்தார்கள். இதன் மேல் கவர்ன்மெண்டார் ஒரு பக்கத்திலே ஜனுபிவிருத்திக்கு நேர் விரோதமாகவும், இடைஞ்சலாகவும், பல விதமான விதிகள் ஏற்படுத்த ஆரம்பித்தார்கள். பத்திராதிபர்களேச் சிறையிலடைப்பதும், ஸ்வராஜ்ய போதனே செய்வோர்களே இமிசை புரிவதும், தேச பக்தர்களே விசாரணேயில்லாது தீபாந்தர மனுப்புவதும் நாட்டிலே வழக்கமாய் விட்டன. இத்தோடு நிதானக் கட்சியாரை வசப்படுத்தி, உண்மை யான சுதேசிகளின் முயற்சிக்குத் தடை புரியச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் கவர்ன்மெண்டார் நிதானக் கட்சியாருக்கு ஹிதமான வார்த்தைகள் அதிக மாகச் சொல்வதோடு, சிற்சில ஸாமானிய காரியங்களிலே நிதானக் கட்சியார் விரும்பக்கூடிய சில வேடிக்கை யனு கூலங்கள் செய்யத் தொடங்கினுர்கள். இதிலே மேத்தா முதலியவர்கள் மனது மயங்கிப் போய் சுதேசிய அபிவிருத்திக்குத் தம்மால் இயன்ற அளவு தடை செய்யத் தீர்மானித்து விட்டார்கள்.

ஸூரத்திலே சென்ற வருஷம் ஓர் மாகாணச் சங்கம் நடந்தபோது மேத்தா வகையராக்கள் அந்த சங்கத் திலே காங்கிரஸ் தீர்மானங்களுக்கு நேர் விரோதமான வேலே செய்து முடித்து விட்டார்கள். ஜாதீயக் கல்வியைப் பற்றியும் பஹிஷ்காரத்தைப் பற்றியும் பிரஸ்தாபமே யில்லாமல் மேத்தா காரியத்தை நடத்தி விட்டார். மேலும் சென்ற சில மாதங்களாக நிதானஸ்தர்கள் பேசும் பேச்சுக்களேயும், செய்யும் செய்கைகளேயும் கவனிக்கும் போது அவர்கள் ஸர்க்காரைத் திருப்தி செய்விக்கும்

பொருட்டாக சுதேசிய விளக்கை மங்கச் செய்ய உறுதி கொண்டு விட்டார்களென்று வெளியாகத் தொடங்கிற்று.

நாகபுரத்தில் நடத்த வேண்டும் என்று தீர்மானம் செய்யப் பட்டிருந்த காங்கிரஸ் கூட்டத்தை மேத்தாவும் அவருடைய பூஜாரிகளுமாகக் சேர்ந்து சூரத் நகரில் நடத்தத் தீர்மானித்து விட்டார்கள். அதிலே புதிய கட்சியார் என்பவர்களுக்கு சந்தேகம் அதிகப்பட்டது. அப்படியிருக்க, காங்கிரஸ் நடப்பதற்கு சுமார் 10 தினங் களுக்கு முன்னமே இந்த காங்கிரஸில் இன்னின்ன விஷயங்கள் தீர்மானிக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு ஓர் ஸூசனைப் பத்திரிகை நாடு முழுவதும் நிதானஸ்தர்களால் அனுப்பப் பட்டது. அதில் ஸ்வராஜ்யம், பஹிஷ்காரம், ஜாதீயக் கல்வி என்ற விஷயங்களைப் பற்றிய பிரஸ்தாபமே இல்லாமலிருந்தது. இதனுல் புதிய கட்சியார் கொண் டிருந்த சமுசயங்கள் முன்னிலும் பதின்மடங்கு தீக்ஷண்ய மடைந்தன. முந்திய (1906) வருஷத்திலே கல்கத்தாவில் புதிய கட்சியார் அரும்பாடு பட்டதன் பேரில் காங்கிரஸ் சபையாரால் அங்கீகாரம் செய்து கொள்ளப்பட்ட மேற்படி தீர்மானங்களை நிதானஸ்தர்கள் இலேசாக ஒதுக்கிவிடப் போகிறுர்களென்பதை அறிந்து அநேகர் மனம் புழுங்க லாயினர். ஸூரத் நகரமோ மேத்தா பிறந்த இடம். ராஜ்ய சம்பந்தமான விவகாரங்களில் அதிகப் பழக்கமற்ற வர்களும் தேச பக்தியைக் காட்டிலும் காசு பக்தியே பெரி தென்ற எண்ணம் கொண்டவர்களும் ஆகிய குஜராத்திப் பிரபுக்களின் செல்வாக்கு அந்த ஊரிலே அதிகம். அந்தப் பிரபுக்களிலே பெரும்பாலார் மேத்தா சொல்லியபடி யெல்லாம் ஆடக்கூடிய பொம்மைகள். இந்தத் தன்மை கொண்ட இடத்திலே புதிய கட்சியார் எவ்வளவு பலத் துடன் போன போதிலும் காங்கிரஸ் சபையை ஊர்த்துவ முகமாக்கி மேலபிவிருத்திகள் கொள்ளத் தக்கவாறு செய்

வித்தல் கஷ்டம் என்பது சொல்லாமலே விளங்கும். சுதேச பக்திக்குத் தாய் வீடுகளில் ஒன்ருகிய கல்கத்தா நகரத்திலே புதிய கட்சியாருக்கிருந்த செல்வாக்கும் வல்லமையும் 'நித்திரைக் குகை' (Sleepy Hollow) என்று நியாயமான பெயர் படைத்திருக்கும் சூரத் நகரத்தில் ஏற்படுதல் சாத்தியமில்லையல்லவா! பாரத பக்த திலகராகிய ஸ்ரீமான் பால கங்காதார திலகர், இதனை நன்கு தெரிந்துகொண்டவராகி, காங்கிரஸ் சபை சூரத் நகரில் மேல் முகமாகச் செல்லாவிடினும் தாழ்முகமாக்கப் படாமலாவது முன்னிருந்த நிலைமையைப் பாதுகாத்திருக்கச் செய்ய வேண்டுமென்று பிரயத்தனங்கள் செய்யத் தொடங்கினுர். "சுயபலம், ஆத்தும ஸஹாயம் என்பவற்றையே நம்பி தேச நலத்துக்குரிய உண்மையான வழிகளைக் கைக்கொண்டிருக்கும் சுதேசியக் கட்சியாரின் விருப்பப்படியே முழுதும் காங்கிரஸ் சபையின் தீர்மானங்கள் அமைக்கப் பெருவிட்டாலும் போகட்டும். அதற்கு வருஷந்தோறும் சிறிது சிறிதாகப் பாடுபட்டு நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுவோம். சூரத் நகரில் ஒரு கட்சியாரின் திறமை செல்வதுபோல் இனி வருஷந் தோறும் எல்லா நகரங்களிலும் செல்லமாட்டாதல்லவா? ஆதலால், அபிவிருத்தியைப் பற்றிப் பின்னுல் பார்த்துக் கொள்வோம். ஆனுல் இவ் வருஷத்தில் (1907) தீர்மானங்களின் நிலை முன்பிருந்த மாதிரிக்குத் தாழ்ந்து போய் விடாமல் அவசியம் கவனித்துக்கொள்ள வேண்டும். வெள்ளைக்காரரின் நய வார்த்தைகளுக்கும், பய வார்த்தைகளுக்கும் வசப்பட்டு நிதானஸ்தர் என்று பெயர் கொண்டிருக்கும் கூட்டத்தார் சென்ற வருஷம் கல்கத்தாவிலே செய்து கொள்ளப்பட்ட முக்கியமான தீர்மானங்களிலே சிலவற்றை இவ் வருஷம் நழுவவிட முயற்சி பண்ணுகிருர்கள். இதை நாம் ஒரு போதும் பொறுத்திருக்கலாகாது" என்று ஸ்ரீ திலகர் நிகிச்

யித்துக் கொண்டார். இந்த நோக்கத்தின் பேரில் காங்கிரஸ் கூடுவதற்குச் சில தினங்கள் முன்பாகவே திலகரும் அவர் கட்சியாரும் சூரத் நகரத்துக்கு வந்து, பொதுக் கூட்டங்கள் நடத்தி ஜனங்களுக்குத் தமது கருத்தை விண்ணப்பம் செய்துகொண்டார்கள்.

காங்கிரஸ் தேவிக்கு முன்னமேயே அணிந்திருக்கும் மணிகளைக் கழற்றி யெறிந்துவிட வேண்டுமென்ற கெட்ட நோக்கம் கொண்டிருந்த நிதானத் தலைவர்களை எவ்வகையாகிலும் சரிப்படுத்தி அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு சமரசமாகப் போக வேண்டுமென்று திலகர் செய்த முயற்சிகள் கொஞ்சமல்ல. எப்படியாவது காங்கிரஸ் விக்கினமில்லாமல் நடந்தேற வேண்டும் என்பதே திலகருடைய நோக்கம். ஆனால் நிதானஸ்தர்களோ எவ்விதமான சமாதானத்துக்கும் இணங்காமல் ஓரே முரண் கொண்டவர்களாக இருந்து விட்டார்கள். இதன் பேரில் திலகர் ஓர் உபாயம் செய்தார். அது யாதெனில்? ராஸ் விகாரி கோஷ் என்றவரை இவ் வருஷம் இவர்கள் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவரோ சபைத் தலைமைக்குச் சிறிதும் அருகரில்லை. இவருடைய பிரசங்கம் காங்கிரஸ் சபையில் வாசிக்கப்படு முன்னரே கல்கத்தாப் பத்திரிகைகளில் பிரசுரமாகி அதன் ஸாராமிசங்கள் தந்தி மூலமாக ஸூரத்துக்கு வந்து விட்டன. இரு கட்சியாருக்கும் பொதுவாயிருந்து நியாய அந்நியாயங்களைத் தீர விசாரித்து அறிந்து பக்ஷபாதமில்லாமல் நடத்துபவரே காங்கிரஸ் போன்ற மகா சபைக்குத் தலைவராயிருக்குந் தகுதியுடையவர். அவ்வாறில்லாமல் ஒரு கட்சி மனிதனாக இருந்துகொண்டு தமது தலைமை உபந்நியாசத்திலே ஓர் முக்கியமான கட்சியாரைப் பற்றி அவதூறுகள் எழுதி வந்திருக்கும் அவசர குணமுடையவரும், பொறுமையற்றவருமாகிய ஒருவர் அந்த

ஸ்தானத்துக்கு தகுதியுடையவராக மாட்டார். இவரைப் புதிய கட்சியார் அக்கிராசனம் பெறக் கூடாதென்று எதிர்க்க உரிமையுடையவராகின்றார்கள். ஆனால் இதுவரை காங்கிரஸ் சபாநாயகர் எவ்விதமான எதிர்ப்புமில்லாது பொதுவாக எல்லாக் கட்சியாலும் அங்கீகாரம் செய்யப் படுதல் மரபு. ஆகவே இந்த வருஷம் புதிதாக எதிர்ப்புத் தொடங்குவோமேயானால் அது நிதானஸ்தர்களின் மனதைப் புண்படுத்தக் கூடும். இதனை உத்தேசித்து அவர்களிடம், "நாம் சபைத் தலைவர் நியமனத்தை எதிர்ப்பது கிடையாது. அதற்குப் பிரதியாக நீங்கள் சென்ற வருஷத் தீர்மானங்களைக் குலைப்பதில்லை என்று வாக்குறுதி கொடுங்கள் என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால் அவர்கள் தம்முடைய தீய செய்கையை நிறுத்தி விடுவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை" என்று திலகர் நிச்சயித்தார்.

அதற்கிணங்கவே புதிய கட்சியார் "காங்கிரஸ் தீர்மானங்கள் முன் வருஷத்து நிலைமையிலே பாதுகாக்கப் படுமென்று வாக்குறுதி கொடுத்தால் நாங்கள் சபைத்தலைவர் நியமனத்தை எதிர்ப்பதில்லை. அப்படி வாக்குறுதி கொடுக்காத விஷயத்தில் எதிர்த்தே தீருவோம்" என்றனர். அவ்விதமான வாக்குறுதி கொடுக்க கோகலே முதலியவர்கள் சம்மதிக்க வில்லை, சமாதானத்துக்கு வருபவர்கள் போலப் பாவனை செய்துவிட்டு கடைசியில் நிதானஸ்தர்கள் ஏமாற்றி விட்டார்கள். இதிலே புதிய கட்சியாருக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. இடையே சென்னைப் பிரதிநிதிகளின் கூடாரத்தில் ஸ்ரீ கோகலே ஒரு மீட்டிங் நடத்தினார். அவர் புதிய கட்சியாரை ஸர்க்கார் பூச்சாண்டியின் பெயரைச் சொல்லி பயமுறுத்தியது மல்லாமல் வேறு பல விதங்களாலும் அவர்கள் மனதைப் புண்படுத்தினார். இது நிற்க.

26ந்தேதி பகலில் காங்கிரஸ் சபை கூடிற்று. சுமார் 1500 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பிற ஜனங்கள் பல்லாயிரம் பேர் வந்திருந்தார்கள். சபை தொடங்கு முன்பாக சில பார்ஸி மாதர்களும், குஜராத்தி ஸ்திரீகளும், 'வந்தே மாதரம்' பாட்டையும் வேறு பல சுதேசியப் பாடல்களையும் வாத்தியத்தோடு இனிய கந்தருவக் குரலிலே பாடினார்கள். அவர்கள் பாடும்போது சபையோ ரெல்லாம் எழுந்து நின்று பக்தி பாராட்டினார்கள். அப்பால் ஸ்ரீமான் மால்வி (உபசரணைச் சங்கத்தின் தலைவர்) வழக்கப்படியே நல்வரவு கூறி ராஸ் விஹாரி கோஷ் சபைத் தலைவராக வேண்டுமென்று பிரேரணை செய்தார். அதை ஆமோதிக்கும் பொருட்டாக ஸ்ரீமான் சுரேந்திரநாத் பானர்ஜி எழுந்தார். உடனே பெருங் கூச்சலும் குழப்பமும் உண்டாய் விட்டன.

[பாரிஸாலிலும், கல்கத்தாவிலும் சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய நிதானக் கட்சித் தலைவர்களைப் போலீஸ் காரர்கள் அவமதிப்புடன் நடத்திய காலத்தில் தேச முழுதும் ஜனங்கள் மனத்திலே ஆத்திரமுண்டாய் அந் நிதானத்தலைவர்கள் மீது ஜனங்களுக்கிருந்த பற்றும் பக்தியும் பலமடங்கு அதிகப் பட்டன. மைமன்ஸிங் முதலிய இடங்களிலே போலீஸார் ஜனங்களைப் படுத்திய இமிசை நமது நெஞ்சினின்றும் நீங்க இன்னும் நெடுங் காலம் செல்லும்.

இவ்வாறிருக்க மித்னபூரில் நடந்த கான்பரன்சிலே நிதானக் கட்சித் தலைவர் சுதேசியஸ்தர்களை (புதிய கட்சியாரை) அடக்க வேண்டுமென்ற நோக்கத்துடனே போலீஸார் உதவியை நாடி சபைக்குள்ளேயே போலீஸாரை அழைத்து வைத்திருந்தபோது பொதுஜனங் களுக்கு அளவற்ற துக்கமும் கோபமும் உண்டாயின,

நிதானக் கட்சியார் பொது ஜனசங்கத்திலே போலீஸ் அதிகாரிகளின் சகாயத்தைக் கொண்டு தங்களோடு பொது நோக்கமுடைய தேசாபிமானிகளை பயமுறுத்த வேண்டுமென்ற இழிவான சிந்தை கொண்டதிலிருந்து சுதேசிகளுக்கு நிதானஸ்தர்களிடம் வெறுப்பும் சினமும் உண்டானது ஓர் வியப்பாக மாட்டாது. நிதானஸ்தர்களின் மேற்படி துரோகச் செய்கைக்கு பாபு சுரேந்திரநாத் பானர்ஜியும் உடந்தையாக இருந்தார். மித்னபூர் சங்கத்திலே சுரேந்திர நாதரும் ஓர் போலீஸ் அதிகாரியும் பிரசங்க மேடையின் மீது சேர்ந்து உட்கார்ந்திருந்த வரிசையைக் கண்டவுடனே சுதேசியஸ்தர்களின் மனம் பொங்குவதாயிற்று. சுரேந்திர நாதரைத் தேசபக்த சிகாமணியாகவும் ஜகத்குருவாகவும் பாராட்டிவந்த ஜனங்களின் மனதிலே அக்காட்சி பழுக்கக் காய்ச்சிய வேல் கொண்டு குத்தியது போல் ஆயிற்று. மித்னபூர் கான்பரன்ஸ் நடந்த காலத்தில் இச்செய்தி பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்தது.] நிற்க.

சென்ற டிசம்பர் மாதம் 26 ந்தேதி சூரத் காங்கிரஸ் கூடி, மிஸ்டர் மால்வியின் உபந்யாசம் முடிந்த உடனே சபாநாயகரைப் பற்றிய பிரேரணையை ஆமோதிக்கும் பொருட்டாக ஸ்ரீ பானர்ஜி ஒரு சிங்கம் எழுந்தாற்போல எழுந்து நின்றார். இரண்டு வாக்கியங்கள்கூடச் சொல்லி முடிவாகவில்லை. அதற்குள் மகாசபையிலிருந்து "மித்னபூர் துரோகி" என்ற ஒரு சத்தம் உண்டாயிற்று. அவ்வளவுதான். அப்புறம் 20 நிமிஷங்கள் வரை சபையிலிருந்து அமளி சொல்லி முடியாது. "மித்னபூர் துரோகி" "உட்காரும்! உட்காரும்" என்ற இரைச்சல் காது செவிடுபடும்படியாய் விட்டது. நெடுங்காலமாக ஒருவரை ஜனங்கள் தேவதா விசுவாசத்துடன் பேணி வந்து, பிறகு திடீரென்று அவர் துரோகம் செய்து விட்டதாக அறிந்து

கொள்வார்களானுல் அச்சமயத்தில் அவர்களுக் குண்டாகும் கோபமும், ஆத்திரமும் ஆன சண்ட மாருதத்தை அடக்க யாராலும் முடியாது. ஆயிரம் தொண்டைகளிலிருந்து ஏக காலத்தில் நானுவிதமான இரைச்சல்கள் உண்டாயின. சபை நிலைகலங்கிப் போய் விட்டது. சுரேந்திர பானர்ஜியிடம் விசுவாசம் மாரு திருந்த கட்சியார் ஒரு புறத்திலே எதிர்ச் சத்தம் கிளப்பத் தொடங்கிவிட்டார்கள். "பேசும் பேசும்" "Go on Go on" என்ற கூக்குரல்கள் வேறு அபரிமிதமாக எழுந்துவிட்டன. இரண்டு வகைப்பட்ட இந்தச் சத்தத்திலே சுரேந்திரநாத் பானர்ஜியின் கடல் ஒலி போன்ற ஓசை கூட அடங்கிப் போய்விட்டது. அவர் எவ்வளவோ சிரமப்பட்டுத் தம்மால் இயன்ற மட்டும் உரத்த குரலிலே பேசிப் பார்த்தார். பலிதமில்லாமற் போய் விட்டது. உடனே சுரேந்திர நாதர் திடீரென்று மேஜையின்மீது தாவி ஏறி நின்று கொண்டு "I will be heard" எனக்கு நீங்கள் செவி கொடுத்தே தீர வேண்டும்" என்று கர்ஜனை செய்தார். எவ்வளவு கர்ஜனைசெய்தால்தான் என்ன? நிஷ்பிரயோஜன மாகி விட்டது. சுரேந்திரநாத் பானர்ஜி மேஜையிலிருந்து இறங்கி விட்டார்.

சபை இனி நாளைக்குத்தான் கூடும் என்று சொல்லி விட்டு நிதானக் கட்சித்தலைவர் எல்லாம் பின் பக்கத்து வாயில் வழியாகத் தப்பிச் சென்று விட்டார்கள். வருணிக்க முடியாத குழப்பமும் அமளியும் ஒருமட்டில் முடிவு பெற்றன. இவ்வளவு விமரிசையோடு .26ந் தேதி காங்கிரஸ் சபை கலைந்தது.

அப்பால் இரவு வரையிலும் எங்கே பார்த்தாலும் இதுவே பேச்சாயிருந்தது. காங்கிரஸ் சபை தொடங்கி 23 வருஷ காலமாயும் இதுவரை இந்தமாதிரி ஒரு போதும்

நடந்தது கிடையாது. 'இது என்ன புதுமை! என்ன காலக்கேடு' என்று வியப்பார் சிலர், பிரதிநிதிகளாக வந்தவர்களிலே ஒருவர் திடீரென்று காங்கிரஸ் கூடும் தினத்தில் மரணமடைந்த சகுனத்தின் பயனைக் கண்டு விட்டோமென்பார் வேறு சிலர். "வங்காளத்தில் டாக்கா மாஜிஸ்ட்ரேட்டை சுட்டு விட்டதாகப் பிரஸ்தாபம் வந்திருக்கிறது. கவர்ன்மெண்டார் மகா கோபமடைந்திருப்பார்கள். தேசத்திற்கு என்னென்ன கோரமான கொடுமைகள் விளையப் போகின்றனவோ! அதற்கெல்லாம் இதுவோர் முற்குறியாகும்" என்று கலங்குவோர் சிலர். யார் முகத்தைப் பார்த்தாலும் கலக்கத்தைத்தவிர வேறு தெளிவு கிடையாது.

26 ந் தேதி மாலையில் நகர மத்தியிலே புதுக் கட்சியாரின் சபையொன்று கூடிற்று. எனக்கு உடம்பு சிறிது அசௌகரியமாக இருந்த படியால் நான் அங்கே போகக் கூடவில்லை. நடந்த விஷயங்கள் இன்னவென்று அங்கு போயிருந்த எனது மித்திரர்களிலே சிலர் மூலமாகத் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு இரவு 8 மணிக்குச் சென்னைப் பிறதிநிதிகளின் கூடாரத்திலே ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் அக்கிராசனுதிபதியாக ஒரு மீட்டிங் நடந்தது.

ஸ்ரீ. ஜி சுப்பிரமணிய ஐயர் "நடந்தது நடந்தாய் விட்டது. இனி அதனைப்பற்றி விசனப்படுவதனுலேயும், பரஸ்பரம் குற்றம் கூறுவதனுலேயும் யாதொரு பயனும் கிடையாது. நாளைக்கேனும் இவ்வித அசம்பாவிதமான காரியங்கள் நடக்காமலிருக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்" என்றார்.

அப்போது சென்னைப் புதிய கட்சிப் பிரதிநிதிகளில் ஒருவராகச் சென்றிருந்த ஸ்ரீ துரைசாமி ஐயர் M. A., B. L பின்வருமாறு பேசினார் :

"இன்று நடந்த குழப்பத்துக்குப் புதிய கட்சியார் பொறுப்பாக மாட்டார்கள். அவர்களே பொறுப்பாளிகள் என்று சிலர் எண்ணியிருக்கிறார்கள். அது மிகத்தவறான எண்ணம். மித்னபூர் சம்பவத்தைக் கருதி சுரேந்திர நாதரின் மீது சில பிரதிநிதிகளுக்கு ஆத்திர மிருந்த படியால் அவர்கள் அவருடைய பிரசங்கத்துக்குத் தடை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடைய கூச்சல் சிறிது நேரத்தில் தானே நின்று போயிருக்கும். அதன்பிறகு நிதானஸ்தர், புதிய கட்சியார் என்ற எல்லா வகுப்புக் களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் தமக்கிஷ்டமானபடி யெல்லாம் சத்தமிட்டதுதான் சபைநடத்த முடியாமல் செய்துவிட்டது. அது எவராலும் தடுக்கக் கூடியதன்று. ஒருவர் மீது சபையாருக்குக் கோபமிருக்குமானால் அவரை ஆட்சேபித்துச் சபையார் ஓரிரண்டு நிமிஷம் சில கண்டன வார்த்தைகள் சொல்லுவது தப்பாக மாட்டாது. இது எல்லாச் சபைகளிலும் நடப்பது வழக்கம்தான். அதன் பேரில் எல்லோரும் கோபமுதிர்ச்சியடைந்து சபை குழப்ப மடைந்து விடுமானால் அதற்கு யாரும் பழியாக மாட்டார்கள்" என்று விவரித்தார்.

அப்பால் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதி சொல்லி யதாவது :

இன்று மாலை நடந்த புதுக்கட்சியார் சங்கத்திலே ஸ்ரீ திலகரும், மற்றத் தலைவர்களும் சொல்லிய விஷயங்களை என் மித்திரர் ஒருவர் வந்து என்னிடம் சொன்னார். அதை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்று பகலில் நடந்த அசம்பாவிதமான காரியத்துக்கு யார் ஜவாப் தாரியாக இருந்தபோதிலும், நாளைமுதல் காங்கிரஸ் முடியும் வரை இம்மாதிரியான சம்பவம் நிகழ்வதற்குப் புதிய கட்சியைச் சேர்ந்த எந்தப் பிரதிநிதியும் இடம்

கொடுக்கலாகாது என்று எங்கள் கட்சியாருக்குத் திலகர் சொல்லியிருக்கிறார். "ஐக்கிய பலம். நிதானக் கட்சியாரும் நமது கட்சியாரும் சேர்ந்து பாடுபட்டால்தான் தமது தேசநன்மைக்கு விரைவாக ஹேது ஏற்படும். நமது கட்சியாரை காங்கிரஸிலிருந்து பிரித்து விடுவதற்கு அவர்கள் பலவிதமாக முயற்சி புரிந்து வருகிறார்கள். அதற்கு என்ன வியாஜம் ஏற்படப் போகிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் ஏமாந்து போய் ஓர் வியாஜம் ஏற்படுத்திக் கொடுத்துவிடலாகாது. இன்று நடந்த குழப்பத்திற்கு நமது கட்சியார் முகாந்திரமில்லை என்பதை நான் நன்றாக அறிவேன்.

"ஆகையால் நாளைக்கு சுரேந்திரநாதராகட்டும், வேறு எந்த நிதானஸ்தர்களாகட்டும் நம்மைப்பற்றி என்ன சொல்லிய போதிலும் நீங்கள் எல்லாம் வாய் திறவாமல் மவுனமாகக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். அவர்களுடைய பிரசங்கத்துக்கு எவ்விதமான தடையும் செய்யக்கூடாது" என்று திலகர் வற்புறுத்தியிருக்கிறார். ஆதலால் இனியெனும் நம்மிரு கட்சியருள் ஒற்றுமையாக நயத்தில் காரியம் நடக்கவேண்டும் என்பதே திலகரும், அவரைப் பின்பற்றுவோர்களும் கொண்டிருக்கும் நோக்கமென்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். காங்கிரஸ் சமயத்தில் நம்மவர்கள் இரைந்து மூச்சுக்கூட விடுவதில்லை என்று மவுன விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உங்களுக்குத் திருப்தி விளைவிக்குமென்று நம்புகிறேன்." என்று பேசினார்.

இதன் பேரில் சபையோர்கள் எல்லாம் மிக்க சந்தோஷம் பாராட்டினார்கள். 27ந் தேதி காங்கிரஸ் நிர்விக்கினமாக முடிவு பெறுமென்ற முழுநம்பிக்கையுடன்

அன்றிரவு பிரதிநிதிகள் எல்லாரும் நித்திரைக்குச் சென்றார்கள். மறுநாள் இன்றைக் காட்டிலும் பெரிய சண்டமாருதம் வீசப்போகிற தென்பதை நாங்கள் கனவிலுங்கூட அறிந்திருக்கவில்லை.

மறுநாள் 27ந் தேதி. பொழுது விடிந்தது. சுமார் 8 மணிக்கெல்லாம் சென்னைப் பிரதிநிதிகளின் ஓர் சபை சேர்ந்து விட்டது. இச்சபையின் நோக்கம் யாதெனில் முதல் நாள் காங்கிரஸ் குழப்பத்திலே சென்னைப் பிரதி நிதிகள் சிலர் சேர்ந்திருந்தார்களாம். அவர்களுடைய நடத்தையைக் கண்டித்து வெறுப்புத் தீர்மானம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இச்சபை கூட்டினர், இது சென்னைப் பிரதிநிதிகளின் சபை என்ற பொய்ப் பெயருடன் நடத்தப்பட்டது. ஆனால் வாஸ்தவத்திலே. (எங்களில் இரண்டு மூன்று பேரைத் தவிர) இதில் முற்றிலும் நிதானக் கட்சியாரே கூடியிருந்தார்கள். சென்னை மாகாணத்துப் புதிய கட்சிப் பிரதிநிதிகள் அழைக்கப்படவே இல்லை.

இந்தப் 'பிரதிநிதி'ச்சபையிலே ஸ்ரீ, என். சுப்பராவ் அக்கிராசனம் .வகித்தார். படபடப்பும், முன்கோபமும், தேசாபிமானிகளிடம் வெறுப்பும் ஒன்றுகூடி அவதரித்தாற் போன்ற ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி அய்யர் ஏதோ சில அர்த்தமற்ற வார்த்தைகள் பேசினார். யாதொரு சம்பந்தமு மில்லாமல் புதிய கட்சியாரைப் பற்றி அவதூறுகள் பேசிக் குவித்து விட்டார். அப்பால் இவருக்கும் புதுக்கட்சியார் சிலருக்கும் உஷ்ணமான வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த சபை முடிந்து விட்டது. அதன் பிறகு புதிய கட்சியாரின் கூட்டம் ஒன்று சேர்ந்து நிதானக் கூட்டத்தின் தீர்மானங் களைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பகலிலே காங்கிரஸ் மகாசபை கூடிற்று. சுரேந்திரர் தாம் முதல் நாள் செய்யத் தொடங்கிய உபந்யாசத்தைச் செய்து முடித்தார். அப்பால் திலகர் 'அமெண்ட் மெண்ட்' திருத்தப் பிரேரனே கொண்டுவந்தார். இதுவரை சபை முழுவதும் அமைதி நிரம்பியிருந்தது. A calm before storm (புயற்காற்றின் முன்னேயுள்ள நிச்சப்தம்) என்று ஆங்கிலேயர் கூறும் வசனத்தைப்போல சாதாரணமாக உள்ள இரைச்சல்கூட இல்லாது அடங்கிப் போயிருந்தது. திலகர் பிரசங்க மேடைமீது ஏறும்போது ஒரு வாலண்டியர் எதிர்த்தான். அந்த வாலண்டியரை யாரோ தள்ளி விட்டார்கள். திலகர் 'அமெண்ட் மெண்ட்' கொண்டு வரப் போவதாக முன்னமே சீட்டு மூலமாகத் தெரிவித்துக் கூட அவரைப் பேச வொட்டாமல் தடுத்துவிட வேண்டும் என்ற அக்கிரமமும், அசம்பாவிதமான முயற்சியும் நிதானக் கட்சித் தலைவர்களால் செய்யப்பட்டது. முதல் நாள் சுரேந்திரர் பேசும்போது சில புதிய கட்சி வாலிபர்கள் இரைச்சலிட்டார்கள் என்பது பற்றிப் பெரிய நியாயங்கள் பேசியதுபோக, இப்போது வயோதிகர்களும், அநுபவசாலி களும் கீர்த்திமான்களுமாகிய நிதானத் தலைவர்கள் அதனிலும் எத்தனையோ மடங்கு கேடுகெட்ட காரியத் திலே தலைப்பட்டுவிட்டார்கள். திலகர் பேசக் கூடா தென்று யாதொரு நியாயமுமில்லாமல் வற்புறுத்தினார்கள். இதற்குள்ளே வெகு அவசரமாக ராஸ் விகாரி கோஷ் நாற்காலிமீது தாவிக்குதித்துத் தாமே காங்கிரஸ் சபா நாயகர் என்பதாக உட்கார்ந்துவிட்டார். திலகர் ராஸ் விகாரியை நோக்கித் "தாம் இன்னும் ஒழுங்குப்படி பிரஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்படவில்லை, அதற்குள் ஏன் அவசரம்?" என்று கேட்டார். ராஸ் விகாரி "தாம் பேசக் கூடாது என்று சொல்லித் தமது உபந்நியாசத்தைப் படனம் செய்ய ஆரம்பித்துவிட்டார், தொடங்கியது

ஆர்வாரம், முதல்நாள் நடந்த குழப்பத்தைக் காட்டிலும் பலமடங்கு பெரிதாகிய குழப்பம் பிறந்து விட்டது. பிரசங்க மேடையின் மேலே இருந்தவர்களிலே பெரும் பாலோர் நிதானக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர் களில் ஒருவன் திலகர் தலையை நோக்கி ஓர் நாற்காலியை எடுத்தெறிந்தான், அது திலகருடைய தலையிலே படாமல் ஸ்ரீ காபர்தே வந்து பாதுகாத்தார். மகாராஷ்ட்ர வீரதிலக மாகிய ஸ்ரீ திலகர் சிறிதேனும் நெஞ்சம் கலங்காமல் மகா சபையை நோக்கிக் கைகட்டி நின்றுகொண்டு சபையை நோக்கி, "நான் அமெண்ட் மெண்ட் கொண்டு வரும் விஷயத்தைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் தெரிய விரும்புகிறேன்" என்றார். குழப்பம் அதிகரித்துப் போய் விட்டது. ராஸ் விகாரி தமது உபந்நியாசத்தைப் படிக்க வேண்டும் என்ற ஒன்றிலேயே கருத்தைச் செலுத்திய வராய் ஆரவாரத்தை அடக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் கைம்மணி ஒன்றை வைத்துக்கொண்டு வெகு பலமாகக் குலுக்கிப் பார்த்தார்.

குழப்பம் முதிர்ந்து விட்டது.

திலகர் மீது நாற்காலிகள் மாரியாகச் சொரிந்தன. தெய்வ கிருபையாலும் அவருடைய பக்தர்களின் தீர நிலை யாலும் அவர்மீது ஒரு துரும்புகூடப் படவில்லை. மகா வீரர்களான பஞ்சாபி க்ஷத்திரியர்களும், மகாராஷ்டிரர் களும், நிராயுதபாணிகளாக இருந்த போதிலும், தமது உடலைக் கருதாமல், தமது சற்குருவாகிய ஸ்ரீ திலகரை அணியணியாக வந்து சூழ்ந்து கொண்டு, அவர் மீது எறியப்பட்டவற்றை யெல்லாம் தமது கையாலும், தலை யாலும் தாங்கி அவருடைய புனித சரீரத்துக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாமல் காத்தார்கள். இதற்குள் மேத்தா முதலிய நிதானத் தலைவர்களால் கூலிக்குக் கொண்டுவந்து

பந்தலிலே திருட்டுத்தனமாக மூலைக்கு மூலை பதுக்கி வைக்கப்பட்டிருந்த 'குண்டா' (செம்படவ முரடர்கள்)) களும், மித்னபூரில் நடந்தது போலவே நிதானக் கட்சி யாரால் துரோக சிந்தையுடன் வரவழைத்து வைக்கப் பட்டிருந்த போலீஸ் சேவகர்களும் வந்து பிரசங்க மேடை மீது நிரம்பிப் போயினர். போலீஸார் கையிலே நிராயுத பாணிகளான பிரதிநிதிகள் அடிபட்ட பரிதாபத்தை இப்போது நினைத்தாலும்கூட மனது வருத்தமடைகிறது. அரிய கல்விமான்களும், தாய் நாட்டின் சேவைக்காக நெடுந்தூரங்களிலிருந்து பொருளையும் காலத்தையும் சரீர சுகத்தையும் பொருட் படுத்தாமல் வந்த அபிமானிகளும் ஆகிய பிரதிநிதிகளை அடிக்கும் பொருட்டு, முன்னதாகவே இரக்கமற்ற ஈன குணமுடைய பாமர முரடர்களையும், போலீஸையும் வரவழைத்து வந்தவர்களை என்னென்று வருணிப்பதென்று நமக்குப் புலப்படவில்லை. குழப்பம் கலகமாய் விட்டது. பிரசங்க மேடை யுத்தகளமாய் விட்டது. மகாராஷ்டிரர்களை விசேஷமாகக் குறி பார்த்துப் போலீசார் பார்த்துப் பார்த்து அடித்தார்கள். நிராயுத பாணிகளைத் தோன்றியவாறு தடிகொண்டு புடைப்பது சௌரியமில்லை யென்று போலீஸ் முரடர்களுக்குத் தோன்றவில்லை. அவர்களை ஏவி விட்ட கற்றறி மூடர் களுக்கே இது தோன்றாமல் போய் விட்டதே! ஒரு மகாராஷ்டிரப் பிரதிநிதிக்கு மண்டை மூன்று பிளவாகக் கிறிப் போய்விட்டது. திலகரைச் சுற்றி நின்று அவருக்கு ஹானி வராமல் பாதுகாத்த வீரர்களின் கூட்டத்திலே சேர்ந்திருந்த சென்னைப் பிரதிநிதிகளிலே இரண்டு பேருக்கு பலமான அடிபட்டது. இன்னும் எத்தனையோ பிரதிநிதிகள் பலமான அடியுண்டும், காயப்பட்டும், விழுந்தனர். ஆனால் தமக்கு எத்தனை அடிபட்ட போதிலும் திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாமல் நின்ற இந்தப் பிரதிநிதிகளின்

திடத்தன்மையை எண்ணும்போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சியுண்டாகிறது. பஞ்சாப் க்ஷத்ரிய ரத்ன மாகிய ஸ்ரீபகத் என்பவர் தமது இரண்டு கைகளே ஆயுத மாகக் கொண்டு போலீஸாரின் அடிகளையும், நிதானஸ் தர்கள் வீசிய நாற்காலிகளையும், தாங்கிய வீரத்தன்மை சொல்லுந்தரமன்று. நிதானக் கட்சித்தலைவர்கள் கலக மூட்டி விட்டுப் பின் வாயில் வழியாக தமது பிராணன் கற்கண்டாக நினைத்துத் தப்பியோடிவிட்டார்கள். உயர்ந்த பட்டதாரிகளும், கல்விமான்களும், ஸ்ரீமான்களுமாகிய சில பிரதிநிதிகளைப் போலீசார் கைதிகளாகப் பிடித்துச் சென்று விட்டார்கள் என்ற வதந்தியுண்டாயிற்று.

27ந் தேதி மாலை எங்கள் கூடாரத்திலே யிருந்த குழப்பமும், பரபரப்பும் வருணித்து முடியத் தக்கவை யன்று. "தூத்துக்குடிச் சிதம்பரம் பிள்ளை எங்கே?" என்று ஒரு நண்பர் என்னிடம் மகா ஆத்திரத்தோடு வந்து கேட்டார். "ஆகா! அவரைத் தவறவிட்டல்லவோ வந்து விட்டோம்" என்று நான் நினைத்து வருத்தமடைந்தேன். காங்கிரஸ் பந்தலிலே பெரிய மீசைகளும் "புஸ்தி"களும் வைத்துக்கொண்டு தென்னாட்டில் (திருப்பூரில் என்று ஞாபகம்) வந்து நெடுநாளாக வர்த்தகத் தொழில் நடத்தி வரும் ஒரு ஹிந்துஸ்தானி லாலா, சில போலீசாரை அழைத்துக் கொண்டு வந்து என்னையும், ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையையும், வேறு சிலரையும், அப் போலீசாரிடம் காண்பித்து, "இவர்களெல்லாம் புதிய கட்சியார்கள். இவர்களை அரெஸ்ட் செய்யும்" என்று சொல்லியது என் காதில் பட்டது. ஆனால் அந்த சமயத்தில் போலீஸார் பிரசங்க மேடையின் மீது இருந்த ஆரவாரத்தை நோக்கிச் சென்று விட்டார்கள். எங்களைக் கவனிக்கவில்லை. அப்பால் பந்தலில் கலவரம் அதிகப்படவே நாங்கள் ஒருவரி லொருவர் பிரிந்து போய் இன்னார் இன்ன இடமிருக்

கிருர்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆதலால் ஒருவேளை போலீசார் பின்னிட்டு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ துரைசாமி அய்யர், சுரேந்திர நாத் யதிராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி முதலியவர்களைப் பிடித்துக்கொண்டு போயிருக்கக் கூடும் என்ற சந்தேகம் எனக்குண்டாயிற்று. போலீசார் பிடித்துக் கொண்டு போய் எனது நண்பர்களுக்கு எவ்விதமான தீங்கும் செய்ய முடியாது என்பதை நானறிவேன் என்ற போதிலும் மனதிலே ஆத்திரம் பொறுக்கவில்லை. அவர் களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று இடத்துக்கிடம் சுற்றிப் பார்த்தேன். எங்கும் அகப்படவில்லை. நாகப்பூர் பிரதிநிதிகளின் கூடாரத்திலே ஸ்ரீமான் திலகர் முதலியவர்கள் வந்து தாமதிப்பதாகத் தெரிந்தது. மேத்தாவின் போலீசாரும் குண்டர்களும் போய் நமது மகரிஷியை நெருங்காத வண்ணம் கூடாரத்தைச் சூழ்ந்து சுதேசியப் பிரதிநிதிகள் காவல் காத்துக் கொண்டிருந் தார்கள். அவர்களிடம் கேட்டுக் கொண்டு, அந்த கூடாரத்துக்குள்ளே ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை முதலியவர்கள் இருக்கக் கூடுமென்று போய்ப் பார்த்தேன். அங்கும் இல்லை. பிறகு அங்கிருந்து வெளியேறி எங்கள் வசதிக்கு வந்த போது, யதிராஜ், கிருஷ்ணமாச்சாரி இருவரையும் கண்டேன். சிதம்பரம் பிள்ளை, துரைசாமி அய்யர் இரண்டு பேரும் காங்கிரஸ் பந்தலுக்கு வெளியே வந்து விட்ட தாகவும், அவர்களுக்கு எவ்விதமான சங்கடமும் நேரிட வில்லை என்றும், அவர்களைத் தாம் நேரிலே கண்டதாகவும் ஒருவர் சொன்னார். எங்கள் மனம் ஒருவாறு அமைதி யடைந்தது.

ஆயினும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு வாலிபர்கள் (தேச பக்தியிலும், மனோதிடத்திலும் நிகரற்ற வர்கள்) போலீசார் கையிலே அடிபட்டுத் தாமும் அற்ப

ஜந்துக்களை நையப் புடைத்து வந்தார்கள் என்று கேள்வி யுற்று என் மனது வருத்தமடைந்தது. "ஐயோ! மேத்தா! ஒரு காலத்தில் பாரத மாதாவின் அடிக் கமலங்களிலே உண்மையான பக்தி செலுத்தி வந்த உம்முடைய நெஞ்சு, இப்போது அந்நியர் சகவாசத்தாலும், சுய நலப் பற்றினாலும், உம்முடைய சொந்த சகோதரர் மீது போலீசாரை ஏவிவிடத் தக்கவாறு அவ்வளவு தூரம் கல்லாய் போய் விட்டதே!" என்று எண்ணி சஞ்சல மடைந்தேன். ......அன்று மாலையும் மறு நாளும் புதிய கட்சியார் நகர மத்தியிலே தமது கூட்டங்கள் கூட்டினார்கள். புதிய கட்சியார் மட்டுமேயல்லாது பொதுப் படையாகக் கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்களை அங்கீகாரம் செய்யும் பிரதிநிதிகள் எல்லாரும் சேர்ந்து பாபு அரவிந்த கோஷின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பெரும் சங்கம் நடத்தினார்கள். அங்கே ஸ்ரீ திலகர், காங்கிரசில் பிளவு நேர்ந்ததற்குரிய காரணங்களை எல்லாம் விசதமாக எடுத்துரைத்தார்.

இன்னும் ஒரு முறை சூரத்திலே காங்கரஸ் நடத்துவார்களானால் நாங்கள் எளிதில் அங்கு போகத்துணிய மாட்டோம். ஆனால் மேத்தா வரமாட்டாரென்று நிச்சய மாகும் பக்ஷத்தில் ஒருவேளை போகக் கூடும்.